யாக வைத்து, தரம் உயர்த்துகிற வாய்ப்பு ஏற்படும் போது வேண்டுமானால் கூடுதலாக மருத்துவர்கள் அங்கே வர வாய்ப்பு இருக்கும். எனவே, அதை உறுதியாக என்னால் இப்போது சொல்ல முடியாது. என்றாலும், அதைத் தரம் உயர்ந்த வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி ஆய்வு செய்யும்படி துறைக்குச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 443, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

443—

மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடத்தல்.

*15250—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் நடத்த அவருக்கு அதிகாரம் வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நலத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்களின் தலைமையில்தான் செயல்பட்டு வருகிறது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மேலும் இது மிகச் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமே முழுப்பொறுப்பையும் தந்து, அந்தச் செயல்பாடுகளை அவர்கள் கவனிப்பார்களானால், நன்றாக இருக்கும். இது குறித்து விளம்பரங்கள் செய்யவும், குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வருகின்றவர்களை அழைத்து வரவும், அவர்களைக் கவனிக்கவும், மீண்டும் அவர்களை அழைத்துச் செல்லவும், அவர்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளைச் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் சிறப்பாகச் செயல்பட முடியும். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்வதை மாத்திரம் வைத்துக்

1993 ஏப்ரல் 23]

கொண்டு, எல்லாச் செயல்பாடுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய வாயிலாகச் செய்தோமானால் மிகச் சிறப்பாக இருக்கும். இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதிலே பொறுப்பேற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்குக் கீழே அங்கே இருக்கிற அதிகாரிகள்—மருத்துவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மற்ற அது சம்பந்தமான பணிகள் முறையாக நடக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்கும் தீவிரப்படுத்துவதற்கும் முழுமையாக அவர்களுக்குச் சுதந்திரம் இருக்கிறது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக ஆபரேஷன் தியேட்டர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அது ஒரு சில இடங்களில் செயல்பாடற்று இருக்கிறது. என்ன காரணம் என்று கேட்கிறபோது, அங்கே, சிகிச்சை செய்வதற்குக் கருவிகள் இல்லை என்றும், நல்ல தண்ணீர் இல்லை என்றும் அதற்கு வேண்டிய மருத்துவர்கள் இல்லை என்றும், பேண்டேஜ் துணி, பெட் வசதி இல்லை என்றும் அங்கே இருக்கிற டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டிடம் நன்றாக இருந்தாலும் அதை கோடவுனாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு வசதி செய்யப்படுமானால், பக்கத்தில் உள்ள கிராமங்களிலிருந்து வருகிற மக்கள் எல்லாம் பெரிய நகரங்களுக்கு வராமல் அங்கேயே அதைச் செய்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும். அதன் காரணமாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் மேலும் தமிழகம் முன்னோடியாகத் திகழ்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே நாம் அதிக அளவிலேதான் குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகள் அத்தனையையும் செய்து வருகிறோம். இந்தியத் துணைக்கண்டத்திலே எல்லாவற்றிலும் நாம் தான் முன்னணியில் இருக்கிறோம். இப்போது ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சில இடங்களில் இருக்கிற அறுவை அரங்குகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன் ; குறிப்பாக லீக்கேஜ் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை பொதுப்பணித்துறை மூலமாக நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கருவிகள் இல்லையென்று சொன்னார்கள். அதை எல்லாம் வாங்கித் தரவேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது. சில இடங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அதை ஒவ்வொன்றாக எடுத்து முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டுவர இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 444, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. காஞ்சி பன்னீர் செல்வம் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

444—

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள சமூக நலக் காடுகள்.

*9525—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பரப்பளவு சமூக நலக்காடுகள் ஏற்படுத்தப்பட்டன ?

(ஆ) தற்பொழுது பராமரிக்கப்படும் ஏக்கர்கள் எவ்வளவு ?

(இ) இதற்கான செலவு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 69,500 ஏக்கர் நிலங்கள் பராமரிக்கப்படுகின்றன.

(ஆ) 69,500 ஏக்கர் நிலங்களில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.